

காஞ்சிபுரத்தில் திராவிட சமத்துவ பொங்கல் விழா மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. கிரிக்கெட், கைப்பந்து, சிலம்பம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களை பிடித்த வீரர்களுக்கு பரிசு தொகையை அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்டு ஆறுமுகம், பகுதி செயலாளர் அ.தசரதன், மண்டல குழு தலைவர் திருமதி. சாந்தி சீனிவாசன், மாமன்ற உறுப்பினர் ரா.கார்த்திக், வட்ட செயலாளர் சந்திரசேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டம், பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம், பள்ளிபாளையம் ஊராட்சி, ஓடப்பள்ளி அக்ரஹாரம் கிராம பகுதியில் நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.10,80,000 மதிப்பீட்டில் நியாய விலைக் கடை கட்டிடம் அமைக்கும் பணியை நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக செயலாளர் கே எஸ் மூர்த்தியுடன் இணைந்து ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் துவக்கி வைத்தனர். இந்த நிகழ்வில் பள்ளிபாளையம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ. இளங்கோவன் கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் .

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 322 வது நாள்!

## அம்பத்தூர் தெற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஜன.8-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 322ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (07.01.2026), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 90, பாடி, புதுநகர் கல்வெட்டு அருகில், 2) வட்டம் 93, வீரமாமுனிவர் சாலை, முகப்பேர் கிழக்கு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு. கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் தெற்கு/வடக்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டிக்கா, வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



தமிழர் திருநாள் பண்டிகையை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி 110வது வார்டு, தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புபகுதி, புஷ்பாநகர், 1 முதல் 11வது பிளாக் வரை வசிக்கும் பொதுமக்கள் சுமார் 2500 நபர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு ஏற்பாட்டில் புடவை, வேஷ்டி, சட்டை, கரும்பு, பொங்கல்வைக்கும் பாத்திரம் மற்றும் 2026ஆம் ஆண்டுக்கான நாள்காட்டிகள் பொங்கல் பண்டிகை விழாகாலத் தொகுப்பு வழங்கப்பட்டு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. உடன் ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில்

# ரூ.3.98 கோடி மதிப்பீட்டில் 2 புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி. தொடங்கி வைத்தனர்!

சென்னை, ஜன.8-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிக்காட்டுதலின் படி, நேற்று (07.01.2026) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான அமைச்சர் பி.கே. சேகர்பாபு , மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் , துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் ரூ.3.98 கோடி மதிப்பீட்டில் புதிதாக 2 பல்நோக்குக் கட்டடங்கள், அமைப்பதற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் , மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் , துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலம், வார்டு-56க்குட்பட்ட பிராட்வே சாலை, N-3 முத்தையால்பேட்டை காவல் நிலையம் அருகில் உள்ள ஜீல்ஸ் தெருவில் மாநகராட்சியின் சார்பில் ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பல்நோக்கு மையக் கட்டடப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.

இந்த கட்டடம் 657 சதுர மீட்டர் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்படவுள்ளது. இதில் தரைத்தளத்தில் அலுவலகம், மருந்தகம், வாகன நிறுத்தம், மின்தூக்கி வசதி, முதல் தளத்தில் சென்னை குடிநீர் வாரிய அலுவலக அறை, கழிப்பிடம், இரண்டாம் தளத்தில் மாநகராட்சியின் சுகாதார ஆய்வாளர் அலுவலக அறை, கழிப்பிடம் ஆகியவை கட்டப்படவுள்ளது.

பின்னர், ஆசிர்வாதபுரம், அம்மன் கோயில் தெரு அருகில் மாநகராட்சியின் சார்பில்

ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பல்நோக்கு மையக் கட்டடப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர். இந்த கட்டடம் 496 சதுர மீட்டர் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்படவுள்ளது. இதில் தரைத்தளத்தில் வாகன நிறுத்த வசதி, முதல் தளத்தில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் அலுவலக அறை, கழிப்பிடம், இரண்டாம் தளத்தில் மாநகராட்சியின் மின்துறை உதவிப் பொறியாளர் அலுவலக அறை, கழிப்பிடம், மூன்றாம் தளத்தில் சுகாதார ஆய்வாளர் அலுவலக அறை, வரி வசூலிப்பாளர் அலுவலக அறை, கழிப்பிடம் ஆகியவை கட்டப்படவுள்ளது.

இந்நிகழ்வுகளில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, வட்டார துணை ஆணையாளர் கட்டார ரவி தேஜா, (வடக்கு), மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் வெ.பரிமளம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரமணி மாதவன் எம்.சி. தலைமை!

## நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. முன்னிலை!

# மதுரவாயல் 147 வது வட்டத்தில் பொங்கல் பரிசுப் தொகுப்புடன் ரூ.3000!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

## லயன் எஸ்.ஜி.மாதவன் பங்கேற்பு!

சென்னை, ஜன. 08 -

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வார்டில் இன்று (08.01.2026 - வியாழக்கிழமை) காலை 9.00 மணிக்கு, ஆலப்பாக்கம், கங்கை அம்மன் கோவில் தெரு, சிவன் கோவில் எதிரில் உள்ள நியாய விலை கடையில் - தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பான மக்களின் மகிழ்ச்சி பொங்கும் பொங்கல் பரிசு பொருட்களுடன் ரூபாய் 3000 அடங்கிய பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு பொங்கல் பரிசுப் பொருட்களுடன் ரூபாய் 3,000 வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைக்கிறார்.

ஆகவே நிகழ்ச்சியில் நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் கலந்து கொள்ளுமாறு 147 வது வட்டச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் கேட்டுக்கொண்டுள்ளார்.



சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்..அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15 மண்டல அலுவலக கூட்ட அரங்கில் கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மண்டலம் 15ல் உள்ளடங்கிய வார்டு எண்கள் 192,193,194,195,196, 197,198,199,200 ஆகிய வார்டுகளில் மழைநீர் வடிகால்வாய் பணிகள் நடைபெறும் போது பாதுகாப்பு வேலி அமைத்து பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெறும் இடங்களில் இடைவெளி இல்லாமல் அமைக்க வேண்டுமெனவும், மாநகராட்சி அரசு அதிகாரிகளிடம் எடுத்துரைத்தார். இக்கூட்டத்தில் அனைத்து துறை மாநகராட்சி அதிகாரிகள் அனைவரும் உடனிருந்தனர்.




மானாமதி ஊராட்சியில் என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி,திருப்போரூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் பையனூர் எம்.சேகர் தலைமையில் பாகம் 176,177ல் BLA2,BDA,BLC மற்றும் பொதுமக்கள் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது.இதில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப், மாவட்ட கவுன்சிலர் டி.ஜெயச்சந்திரன், சி.முருகவேல், என்.கோபி, வரதராஜன்,திலீப் சக்கரவர்த்தி, கார்த்திக், வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை தென்மேற்கு மாவட்ட

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, ஜன. 8-

சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ச. சண்முகநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

2026 ஜனவரி, தை திங்கள், தமிழர் திருநாள் - பொங்கல் விழாவை முன்னிட்டு, திராவிடப் பொங்கல் விழாவாகக் கொண்டாடிட, சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் ஆலோசனைக் கூட்டம், இன்று (08.01.2026 வியாழன்) மாலை 7.00 மணி அளவில் , மயிலை பகுதி, 125வது வட்டக் கழக அலுவலகத்தில், (டாக்டர் அம்பேத்கர் பாலம் அருகில்) அவைத் தலைவர் இரா.கா.இளங்கோவன் தலைமையில், மாவட்டச் செயலர் மயிலை த. வேலு எம். எல்.ஏ.அவர்கள், தியாகராய நகர் கிழக்கு பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம். எல்.ஏ., மயிலை கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி. மதி எம்.சி., தியாகராய நகர் மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் , மாவட்ட துணைத் தலைவர், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் , பகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ச.சண்முகநாதன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி. இராசரத்தினம்
### சனவரி 8 (1993)



செங்கற்பட்டு மாவட்டக் கழக அவைத் தலைவராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நான்குமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.

பூவிருந்தவல்லி ஒன்றிய பெருந்தலைவர், பூவிருந்தவல்லி பேரூராட்சித் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

விலைவாசி உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி ஓராண்டு சிறை தண்டனை அனுபவித்தவர்.

“தோடிக்கு ஒரு இராசரத்தினம், தொகுதிக்கு ஒரு இராசரத்தினம்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.